போபாலில் 'இந்தியா' கூட்டணியின் முதலாவது பொதுக்கூட்டம்

சரத்பவார் இல்லத்தில் நடந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முடிவு

புதுடெல்லி, செப்.14

டெல்லியில் சரத்பவார் இல்லத்தில் நடந்த 'இந்தியா' கூட்டணியின் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், போபாலில் முதலாவது பொதுக்கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதாவை வீழ்த்தும் நோக்கத்துடன் காங்கிரஸ், தி.மு.க. உள்பட 28 எதிர்க்கட்சிகள் இணைந்து கூட்டணி அமைத்துள்ளன.

'இந்தியா' என்று பெயரிடப்பட்ட இக்கூட்டணியின் ஆலோசனை கூட்டங்கள், பாட்னா, பெங்களூரு, மும்பை ஆகிய இடங்களில் நடந்துள்ளன. பல்வேறு பிரச்சினைகளை ஆராய 14 உறுப்பினர்களை கொண்ட ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டது.

இந்தியா கூட்டணி ஒருங்கிணைப்பு குழுவின் முதலாவது கூட்டம் நேற்று நடந்தது. டெல்லியில், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் இல்லத்தில் இக்கூட்டம் நடந்தது.

14 உறுப்பினர்களில் 12 பேர் மட்டும் கலந்து கொண்டனர். சரத்பவார் (தேசியவாத காங்கிரஸ்), கே.சி. வேணுகோபால் (காங்கிரஸ்), டி.ஆர். பாலு (தி.மு.க.), டி.ராஜா (இந்திய கம்யூனிஸ்டு), ஹேமந்த் சோரன் (ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா), ஜாவீத் அலிகான் (சமாஜ்வாடி), தேஜஸ்வி யாதவ் (ராஷ்டிரீய ஜனதாதளம்), உமர் அப்துல்லா (தேசிய மாநாட்டு கட்சி), மெகபூபா முப்தி (மக்கள் ஜனநாயக கட்சி), ராகவ் சதா (ஆம் ஆத்மி), சஞ்சய் ஜா (ஐக்கிய ஜனதாதளம்), சஞ்சய் ராவத் (உத்தவ் சிவசேனா) ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைப்பு குழு உறுப்பினரான அபிஷேக் பானர்ஜி (திரிணாமுல் காங்கிரஸ்) பங்கேற்கவில்லை. நேற்று விசாரணைக்கு ஆஜராக அபிஷேக் பானர்ஜிக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பி இருந்தது. அவர் விசாரணைக்கு சென்றதால் இக்கூட்டத்துக்கு வரவில்லை. ஒருங்கிணைப்பு குழுவில் மார்க்சிஸ்ட் கட்சியின் பிரதிநிதி இன்னும் நியமிக்கப்படவில்லை. அதனால் அக்கட்சியும் பங்கேற்கவில்லை.

சனாதன தர்ம சர்ச்சை தொடர்பாக இந்தியா கூட்டணி மீது பா.ஜனதா தாக்குதல் தொடுத்து வரும் நிலையில், ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில், மாநிலவாரியாக கூட்டணி கட்சிகளிடையே தொகுதி பங்கீடு பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பாரதீய ஜனதாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரை நிறுத்த ஆலோசனை நடத்தப்பட்டது.

மராட்டியம், தமிழ்நாடு, பீகார் ஆகிய மாநிலங்களில் பொது வேட்பாளர் தேர்வில் பிரச்சினை இருக்காது என்று இந்தியா கூட்டணி கருதுகிறது. ஆனால், டெல்லி, பஞ்சாப், மேற்கு வங்காளம், கேரளா போன்ற மாநிலங்களில் பொது வேட்பாளர் தேர்வில் சிக்கல் எழும் என்று நினைக்கிறது.

இதுதவிர, கூட்டணியின் பிரச்சார உத்தி பற்றி ஆலோசனை நடத்தப்பட்டது. எந்தெந்த நகரங்களில் பொதுக்கூட்டம் நடத்துவது என்றும் பேசப்பட்டது.

ஒருங்கிணைப்பு குழு கூட்டம் முடிவடைந்த பிறகு, காங்கிரசை சேர்ந்த கே.சி.வேணுகோபால், ஒரு கூட்டு அறிக்கையை நிருபர்கள் முன்னிலையில் வாசித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தொகுதிகளை தீர்மானிக்கும் பணியை தொடங்குவது என்று ஒருங்கிணைப்பு குழு முடிவு செய்துள்ளது. கூட்டணி கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி, விரைவில் தொகுதி பங்கீட்டை இறுதி செய்யும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கூட்டாக பொதுக்கூட்டங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலில், மத்தியபிரதேச மாநில தலைநகர் போபாலில் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் பொதுக்கூட்டம் நடத்தப்படும். அதில், விலைவாசி உயர்வு, வேலையின்மை, பாரதீய ஜனதா அரசின் ஊழல் ஆகிய பிரச்சினைகள் எழுப்பப்படும். சாதிவாரி கணக்கெடுப்பு கோரிக்கையை எழுப்ப கூட்டத்தில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

போபால், பாட்னா, நாக்பூர், கவுகாத்தி, டெல்லி உள்ளிட்ட 6 இடங்களில் பொதுக்கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டதாக மற்றொரு ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர் தெரிவித்தார். ஒருங்கிணைப்பு குழுவின் 2வது கூட்டம், நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் முடிந்த பிறகு டெல்லியில் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

சென்னையில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக்க ரூ.4,058 கோடியில் ஒப்பந்தம்

சென்னை, செப்.14

சென்னையில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக்க ரூ.4 ஆயிரத்து 58 கோடியே 20 லட்சம் மதிப்பில் 3 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு உள்ளன.

சென்னையில் 2ம் கட்டமாக 3 வழித்தடங்களில் மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் நடந்து வருகிறது. இதில், 3 பிரிவுகளில் சுரங்கத்தில் ரெயில் நிலையங்கள் அமைப்பதற்காக ரெயில் விகாஸ் நிகாம் நிறுவனத்திற்கு ரூ.1,730.60 கோடி, ரூ.1,461.97 மற்றும் ரூ.865.63 கோடி என ரூ.4 ஆயிரத்து 58 கோடியே 20 லட்சம் மதிப்பில் 3 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு உள்ளது. இந்த ஒப்பந்தம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (ஜைக்கா) நிதியுதவியின் ஒரு பகுதியாகும். இதற்கான ஏற்பு கடிதம் ரெயில் விகாஸ் நிகாம் நிறுவனத்திற்கு கடந்த ஜூன் மாதம் 20ந்தேதி வழங்கப்பட்டு உள்ளது.

இந்த 3 ஒப்பந்தங்களும் கீழ்ப்பாக்கம் மெட்ரோவில் இருந்து தரமணி வரை 12 சுரங்கப்பாதை மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைப்பதற்கான அனைத்து வகையான பணிகள் மற்றும் 4 சுரங்கப்பாதை மெட்ரோ ரெயில் நிலையங்களின் சுற்றுச்சுவர் தவிர மற்ற கட்டுமான பணிகளை உள்ளடக்கியதாகும்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவன மேலாண்மை இயக்குனர் மு.அ.சித்திக் தலைமையில், இயக்குனர் தி.அர்ச்சுனன் (திட்டங்கள்) மற்றும் ரெயில் விகாஸ் நிகாம் நிறுவனத்தின் தலைமை திட்ட மேலாளர் கமலாகர ரெட்டி ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

நிகழ்ச்சியில், தலைமை பொது மேலாளர்கள் டி.லிவிங்ஸ்டோன் எலியாசர், ரேகா பிரகாஷ் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), பொது மேலாளர் ரவிச்சந்திரன் (சுரங்கப்பாதை), கூடுதல் பொது மேலாளர் டி.குருநாத் ரெட்டி, (ஒப்பந்த கொள்முதல்) மற்றும் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

மகளிர் உரிமைத்திட்டத்தில் தகுதி பெறாத குடும்பத்தலைவிகள் மேல்முறையீடு செய்யலாம்: தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, செப்.14

மகளிர் உரிமைத் திட்டத்தில் தகுதியின்மைக்கு ஆளான குடும்பத் தலைவிகள் மேல்முறையீடு செய்யலாம் என்று தமிழக அரசு அறிவித்து உள்ளது.

குடும்பத்திற்காக அயராது உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதை யோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்க, கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்துகிறது.

இந்த திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற கடந்த ஜூலை 24ந் தேதி முதல் ஆகஸ்டு 4ந் தேதி வரை முதல் கட்டமாகவும், ஆகஸ்டு 5ந் தேதி முதல் 14ந் தேதி வரை 2வது கட்டமாகவும், இந்த 2 கட்டங்களிலும் விடுபட்டவர்களுக்கு ஆகஸ்டு 18ந் தேதி முதல் 20ந் தேதி வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் அரசிடம் உள்ள பல்வேறு தகவல் தரவு தளங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டும், அரசு அலுவலர்களால் நேரடி கள ஆய்வுகளின் மூலம் சரிபார்க்கப்பட்டும், திட்ட விதிமுறைகளைப் பூர்த்தி செய்த ஒரு கோடியே 6 லட்சத்து 500 மகளிர் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.

மேல்முறையீடு

கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட விண்ணப்பதாரர்களின் தகுதிகள் சரிபார்க்கப்பட்டு, அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும், தகுதியின்மைக்கு உள்ளான விண்ணப்பங்களும் ஏற்கப்படவில்லை. விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு 18.9.2023 முதல் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு ஏற்கப்படாத விண்ணப்பதாரர்கள், மேல்முறையீடு செய்ய விரும்பினால், குறுஞ்செய்தி பெறப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் இ–சேவை மையம் வழியாக வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு விண்ணப்பங்களுக்கு 30 நாட்களுக்குள் தீர்வு செய்யப்படும்.

வருவாய் கோட்டாட்சியர் மேல்முறையீட்டு அலுவலராக செயல்படுவார். இணையதளம் மூலம் செய்யப்படும் மேல்முறையீடுகள், அரசு தகவல் தரவு தளங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டு, வருவாய் கோட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்படும். வருவாய் கோட்டாட்சியர், மேல்முறையீட்டு விண்ணப்பங்களைத் தீர்வு செய்ய கள ஆய்வு தேவைப்படும் நேர்வுகளில், சம்பந்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் வழி கள ஆய்வு அறிக்கையைப் பெற்று விசாரணை செய்வார். இந்த மேல்முறையீடு நடைமுறைகள் அனைத்தும் இணையதளம் வழியாக மட்டுமே செய்யப்படும்.

பயனாளிகளின் தகுதி மற்றும் தகுதியின்மைகள் தொடர்பாக தனி நபர்களின் மூலம் வரப்பெறும் புகார்கள் குறித்த விசாரணை அலுவலராக வருவாய் கோட்டாட்சியர் செயல்படுவார். இணையதளம் வழியாகப் பெறப்படும் புகார்கள் மீது, மேல்முறையீட்டு மனுக்களுக்கு பின்பற்றப்படும் அதே நடைமுறைகளைப் பின்பற்றி விசாரிக்கப்படும்.

இந்த தகவலை சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அரசு செயலாளர் வெளியிட்டுள்ளார்.

'உஜ்வாலா' திட்டம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு

ரூ.1,650 கோடியில் கூடுதலாக 75 லட்சம் இலவச கியாஸ் இணைப்புகள் வழங்கப்படும்

புதுடெல்லி, செப்.14–

ஏழை பெண்களுக்கு இலவச சமையல் கியாஸ் இணைப்பு வழங்கும் 'உஜ்வாலா' திட்டத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. இதனால், கூடுதலாக 75 லட்சம் கியாஸ் இணைப்புகள் அளிக்கப்படும்.

வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள ஏழை பெண்களுக்கு இலவச சமையல் கியாஸ் இணைப்பு வழங்கும் 'உஜ்வாலா' திட்டம் கடந்த 2016ம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில், இலவசமாக அளிக்கப்படும் கியாஸ் இணைப்புக்கான செலவை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு செலுத்தி விடும்.

இந்நிலையில், இத்திட்டத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய மந்திரிசபை முடிவு செய்துள்ளது.

பிரதமர் மோடி தலைமையில் நேற்று மத்திய மந்திரிசபை கூட்டம் நடந்தது. அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து மத்திய மந்திரி அனுராக் தாக்குர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

'உஜ்வாலா' திட்டம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது. இந்த 3 ஆண்டுகளில், கூடுதலாக 75 லட்சம் இலவச கியாஸ் இணைப்புகள் வழங்கப்படும். இதற்காக பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.1,650 கோடியை விடுவிக்க மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. இத்துடன் சேர்த்து, 'உஜ்வாலா' திட்டத்தின் பயனாளிகள் எண்ணிக்கை 10 கோடியே 35 லட்சமாக உயரும்.

ஜி20 மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக, பிரதமர் மோடிக்கு பாராட்டும், நன்றியும் தெரிவிக்கும் தீர்மானம், மத்திய மந்திரிசபை கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை ராணுவ மந்திரி ராஜ்நாத்சிங் கொண்டு வந்தார்.

ஜி20 மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியது, ஒட்டுமொத்த நாட்டுக்கும் பெருமையானது. பிரதமர் மோடி மேற்கொண்ட பல்வேறு முன்முயற்சிகள் மீது கருத்தொற்றுமை ஏற்பட்டது. இது, பிரதமர் மோடியின் திறமையான தலைமைப்பண்புக்கு ஒரு அடையாளம். இதை உலகமே பேசுகிறது.

தலைவர்கள் பிரகடனம் ஒருமனதாக ஏற்கப்பட்டது, சர்வதேச நிகழ்வுகளில் இந்தியா முக்கிய பங்கு வகிப்பதை நிரூபித்துள்ளது. பொருளாதார பெரு வழிப்பாதை திட்டம் வரவேற்புக்குரியது.

'அனைவருக்கும் வளர்ச்சி' என்ற பிரதமரின் கொள்கைப்படி, தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, மக்களுக்கு நீதி பெற்று தருவதற்காக இ–கோர்ட் திட்டம் தொடங்கப்பட்டது.

அதன் 2வது கட்டம் முடிந்த நிலையில், 3வது கட்டத்தை தொடங்க மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்துள்ளது. 3வது கட்ட பணிகள், 4 ஆண்டுகள் அமலில் இருக்கும். இதற்கு ரூ.7 ஆயிரத்து 210 கோடி ஒதுக்கப்படுகிறது.

3வது கட்டத்தில், கோர்ட் ஆவணங்கள் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கல், வழக்குகளை ஆன்லைனில் தாக்கல் செய்யும் 'இ–பைலிங்', ஆன்லைனில் கட்டணம் செலுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர்: டெல்லியில் 17ந்தேதி அனைத்துக்கட்சி கூட்டம்

புதுடெல்லி, செப்.14

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரை முன்னிட்டு டெல்லியில் 17ந்தேதி அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்து உள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் முடிவடைந்த நிலையில், வருகிற 18ந்தேதி முதல் 23ந்தேதி வரை சிறப்பு கூட்டத்தொடர் ஒன்றுக்கு மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

நிகழ்ச்சி நிரல் வெளியீடு

18ந்தேதி பாராளுமன்ற பழைய கட்டிடத்தில் கூட்டம் தொடங்கும். அதன்பின் 19ந்தேதி பாராளுமன்ற புதிய கட்டிடத்தில், அவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

சிறப்பு கூட்ட நிகழ்ச்சி நிரல் குறித்து மத்திய அரசு தகவல் வெளியிட்டுள்ளது. சம்விதன் சபாவில் இருந்து பாராளுமன்றத்தின் 75 ஆண்டு காலத்தின் சாதனைகள், அனுபவம், நினைவுகள், கற்றுக்கொண்டவை குறித்து விவாதம் 18ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தேர்வு, தபால் நிலையம் மசோதா, வழக்கறிஞர்கள் (திருத்தம்) மசோதா, பத்திரிகை மற்றும் பத்திரிகை பதிவு மசோதா ஆகிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து ஆலோசனை கூட்டம், சோனியா காந்தி பிரதமருக்கு கடிதம் எழுதுதல் போன்ற நடவடிக்கைகளுக்குப் பிறகு தற்போது நிகழ்ச்சி நிரல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரை முன்னிட்டு டெல்லியில் வருகிற 17ந்தேதி அனைத்துக்கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்து உள்ளது.

இது தொடர்பாக அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்றக்குழு தலைவர்களுக்கு நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி பிரகலாத் ஜோஷி கடிதம் அனுப்பி உள்ளார்.

இந்த தகவலை அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டு உள்ளார்.

மணிப்பூர் விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளால் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டது.

எனவே இந்த 5 நாட்கள் சிறப்பு தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து அனைத்துக்கட்சிகளுடனும் ஆலோசனை நடத்துவதற்காக மத்திய அரசு இந்த கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளதாக தெரிகிறது.

கடைகள், நிறுவனங்களின் தொழிலாளர் நலவாரியத்திற்கு உறுப்பினர்கள் நியமனம்

சென்னை, செப்.14

தமிழ்நாடு தெருவோர கடைகள், கடைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர் நலவாரியத்திற்கு உறுப்பினர்களை நியமனம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

கூடுதல் தலைமைச்செயலாளர் குமார் ஜெயந்தின் உத்தரவில் கூறப்பட்டிருப்பதாவது:–

தமிழ்நாடு தெருவோர கடைகள், கடைகள் மற்றும் நிறுவனங்களின் தொழிலாளர் நலவாரியத்திற்கு உறுப்பினர்களை நியமனம் செய்து அரசு உத்தரவிடுகிறது. அதன்படி, இந்த வாரியத்தின் தலைவராக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் இருப்பார்.

அரசு சார்பு உறுப்பினர்களாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச்செயலாளர், தொழிலாளர் ஆணையர் முதன்மைச்செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோர் செயல்படுவார்கள்.

கடைபணியாளர்கள்தரப்பில் இருந்து 5 பேரும், உடல் உழைப்புத் தொழிலாளர்கள் தரப்பில் இருந்து 5 பேரும் நியமிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

PUBLIC NOTICE

Notice is hereby given that share certificate no. 8521 for 4,000 Equity shares of Face Value Rs. 1/- each bearing Distinctive nos. 5946527 to 5950526 in Folio No. M 000620 of M/S EID Parry (India) Limited, registered in the name of our mother Late Meera P Rao has been lost/ misplaced and We Suman Venkatesh Deshpande and Sanjay Rao have applied to the Company for issue of duplicate share certificate(s). Any person who has any claim/objection in respect of the said share certificates should lodge such claim with the Company at its registered office at Dare House 234 N S C Bose Road Parrys corner, Chennai, Tamil Nadu, 600001, within 15 days from the date of publication of this notice, after which no claim will be entertained and the company will proceed to issue duplicate share certificate in our favor.

Date- 14.09.2023

Place- Chennai

kotak Kotak Mahindra Bank **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை அலுவலகம்: 185, 2வது தளம், அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை 600 006.

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (இனி ''எப்ஐஎச்எப்சிஎல்'' என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் எப்ஐஎச்எப்சிஎல்அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 12.09.2022 சுவாதீனம் செய்யப்பட்டு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு (கேஎம்பிஎல்) மாற்றப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. நீலகண்டன் சி, திருமதி. திலகவதி என் மற்றும் மெசர்ஸ் ஸ்ரீகுமரன் டிம்பர் அன்ட் பர்னிச்சர்ஸ் மார்ட், அதன் உரிமையாளர் திரு. நீலகண்டன் சி** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண். 603607210478648–ன்கீழ் 11.9.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.50,45,581/–(ரூபாய் ஐம்பது லட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து ஐநூற்று எண்பத்தொன்று மட்டும்)** மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ''எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் **12.10.2023** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.23,00,000/– (ரூபாய் இருபத்து மூன்று லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.2,30,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 11.10.2023 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், இரண்டு படுக்கை அறை பிளாட் எண்.சி3, சூப்பர் பில்டப் ஏரியா 882 சதுர அடி (பொதுப் பகுதியை உள்ளடக்கி உள்ளது), 2வது தளம், பிஎஸ்ஏ அபார்ட்மெண்ட்ஸ், மொத்தம் 2925 சதுர அடி நிலத்தில் பிரிவுபடாத பங்கு நிலம் 315 சதுர அடி. மனை எண்.14, அமலநாதன் தெரு, வெங்கடேஸ்வரா நகர், பொழிச்சலூர், சென்னை – 600 074, சர்வே எண்.109/1 மற்றும் 114/3, பட்டாப்படி புதிய சர்வே எண்கள்.109/1பி மற்றும் 114/3பி, பட்டா எண்.648, பொழிச்சலூர் கிராமம், ஆலந்தூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், எல்லைகள் : வடக்கில் : 40 அடி சாலை (அமலநாதன் தெரு), கிழக்கு : 23 அடி சாலை, தெற்கு : காலி மனை, மேற்கு : மனை எண்.15 மற்றும் விஸ்தீரணம் : வடக்குப் பக்கம் : 45 அடி, கிழக்குப் பக்கம் : 62 அடி, தெற்குப் பக்கம் : 45 அடி, மேற்குப் பக்கம் : 68 அடி.

2925 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலமானது தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் பம்மல் சார் பதிவு மாவட்ட எல்லைக்கு உட்பட்டு உள்ளது. சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600) மற்றும் திரு. ராஜேந்திர் தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் http://www.kotak.com/en/bank–auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 14.09.2023 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

homefirst We'll take you home

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

CIN:L65990MH2010PLC240703

இணையதளம்: homefirstindia.com தொலைபேசி எண்.: 180030008425 இமெயில் ஐடி: loanfirst@homefirstindia.com

தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை அறிவிப்பு

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் ஈடுபெற்ற ஆஸ்திகள் விற்பனை – (விதி 8(6)ன் கீழ் அறிவிப்பு)

சட்டத்தின் பிரிவு 13(4)ன்படி, நீங்கள் எங்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை தொடர்பாக ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் (ஹோம் பர்ஸ்ட்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான கீழ்க்கையொப்பமிட்டவர் அட்டவணை சொத்துக்களை கையகப்படுத்தி உள்ளார். கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதியிட்ட எங்கள் அறிவிப்பைப் பார்க்கவும், அதில் குறிப்பிட்டுள்ள ரிசர்வ் விலையை நிர்ணயித்து கீழ் குறிப்பிடப்பட்ட செய்தித்தாளில் ஏல அறிவிப்பை வெளியிட்டுள்ளோம் என்று தெரிவித்துக் கொள்கிறோம். கீழ்க்குறிப்பிட்டுள்ள தேதியில் ஏலம் திட்டமிடப்பட்டது. எந்த ஏலதாரரும் இல்லாததால் ஏலம் வெற்றி பெறவில்லை.

பொதுமக்களுக்கு இதன்மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் உள்ள ஈடுபெற்ற ஆஸ்திகள் தனியார் ஒப்பந்தம் மூலம், கம்பெனியின் நிலுவைத் தொகையை பெறுவதற்காக கம்பெனியின் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதிமுறைகளின்படி "எங்கே எப்படி எவ்வாறு இருக்கிறது" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

எனவே, சட்டம் மற்றும் கட்டமைக்கப்பட்ட அதன் விதிகளின் அடிப்படையில், இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 நாட்களுக்குள் கம்பெனிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை திரும்பப் பெறவும் இந்த அறிவிப்பை நாங்கள் உங்களுக்கு வழங்குகிறோம். தவறும்பட்சத்தில், அட்டவணை சொத்துக்கள் கடன் தொகையை திரும்ப பெறுவதற்காக விற்பனை செய்யப்படும். தற்போது உள்ள சட்டம் மற்றும் இதர சட்டங்களுக்கு உட்பட்டு கம்பெனிக்கு உள்ள இதர உரிமைகளின் கீழ் எந்தவித பாரபட்சமுமின்றி இது உள்ளது.

விருப்பமுள்ள நபர்கள் மேலும் விவரங்கள்/தெளிவுபடுத்தல்கள் மற்றும் அவர்களின் ஆபர்களை சமர்ப்பிக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம். சர்பாசி சட்டம்/விதிகளுக்கு உட்பட்டு விற்பனை இருக்கும்.

வ. எண்.	கணக்கு பெயர்/ உத்தரவாததாரர்கள்	சொத்து விவரங்கள்/சொத்தின் உரிமையாளர்	டிமாண்ட் நோட்டீஸ் தேதி அன்று நிலுவைத் தொகை (ரூ.)	விற்பனை அறிவிப்பு தேதி	பத்திரிக்கை	மின்னணு ஏலத்தேதி	ரிசர்வ் விலை (இந்திய ரூபாயில்)	அங்கீகரிக் கப்பட்ட அதிகாரி எண்
1	மகாலட்சுமி வி, வெள்ளதுரை கே, சண்முகராஜா வி, மகாராஜா வி	பிளாட் எண். 8, பிளாக் 496/14G, மனை எண்.8, ச.எண்.496/14G, புதிய ச.எண்.496/14F–ல் உள்ள 803 சதுர அடி, ஸ்ரீ சாய் திருமால் நகர், எண்.14 பம்மத்துக்குளம் கிராமம், ஆவடி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு, 600052–ல் உள்ளது	6,64,285	13.08.2023	டிரினிட்டி மிரர் + மக்கள் குரல் (ஆங்கிலம் + தமிழ்)	13.09.2023	9,63,600	7550251138

சர்பாசி சட்டம், 2002ன் கீழ் சட்டப்பூர்வ 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

கடன்தாரர்/உத்தரவாததாரர்கள் டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் நாளது தேதி வரையிலான வட்டி மற்றும் துணை செலவினங்களை இந்த அறிவிப்பு வெளியான தேதியில் இருந்து 15 நாட்களுக்கு முன்னதாக செலுத்துமாறு அறிவிக்கப்படுகிறார்கள், அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் சொத்து ஏலம் விடப்படும்/விற்கப்படும் மற்றும் நிலுவைத் தொகை ஏதேனும் இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் மீட்டெடுக்கப்படும்.

தேதி: 14/09/2023,
இடம்: சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கையொப்பமிடப்பட்டது,
ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்